மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 64/2022

பெயர் – நாச்சியார் (பி.வா.சா.1)

நாள் – 27.09.2023

5, 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

இந்த வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திம்முரெட்டியார் எனக்கு என்ன உறவு என்றால் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். திம்முரெட்டியார் 2021ம் ஆண்டு இறந்தார். திம்முரெட்டியாரின் மனைவி பெயர் சுப்புதாய் ஆகும். சுப்புதாயும் திம்முரெட்டியார் இறந்த 10 நாட்கள் களித்து இறந்து விட்டார். இருவருமே கொரோனாவில்தான் இறந்தார்கள். இறந்துபோன திம்முரெட்டியின் உடன்பிறந்தவர்கள் எல்லோரும் இந்த வழக்கில் தரப்பினார்களாக உள்ளார்களா என்றால் உள்ளார்கள்.

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

திம்முரெட்டியாரின் உடன்பிறந்தவர்கள் எத்தனைபேர்கள் என்றால் என்னையும் சேர்ந்து 6 பேர்கள் ஆவோம். மூத்தவர் சென்னையன் அவர் சமீபத்தில் தான் இறந்தார். அடுத்தது இறந்துபோன திம்முரெட்டியார். அதற்கு பிறகு பெருமாள் அவர் இறந்துவிட்டார். பெருமாளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அடுத்து கேசவன். அவரது மனைவி பெயர் சொர்ணாம்பிகை. கேசவன் இறந்துவிட்டார். கேசவனுக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள். வீரசின்னம்மாள் 1ம் பிரதிவாதி சண்முகராஜின் மனைவி ஆவார். ஜெகநாதபெருமாள் சொர்ணாம்பிகையின் மகன் ஆவார். கேசவனின் ஒருமகன் பெயர் ஜெகநாதபெருமாள் ஆகும். மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் இறந்துபோன எனது உடன்பிறந்தவர்களின் வாரிசுகளை இறந்துபோன திம்முரெட்டியாரின் வாரிசுகளாக சேர்க்க சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. சுப்பையா (எ) முத்துராஜ் எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன் ஆவார். என் பெயர் நாச்சியார். சுப்பையா (எ) முத்துராஜ் க்கு குழந்தைகள் கிடையாது. அவர் தனது அண்ணன் மகனை தத்துஎடுத்துள்ளார். சென்னையன் மற்றும் சுப்பையா (எ) முத்துராஜ் ஆகியோர்கள் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் எடுத்துள்ளோம். வாதி சண்முகவடிவம்மாளுக்கு

பூர்வீக வீடு சத்திரப்பட்டியில் உள்ளது என்றால் சரிதான். அந்த பூர்வீக வீட்டை பொறுத்து இறந்துபோன சுப்புதாய்க்கு 2.9.2009ம் தேதியில் சரிபாதி பாகத்தை காலி இடமாக அவரது சகோதரியான வாதி தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2.9.2009ம் தேதியில் வாதி சண்முகவடிவம்மாளும் அவரது சகோதரி சுப்புதாயும் சுப்புதாயின் கணவர் திம்முரெட்டியாருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மேற்படி பூர்வீக வீட்டில் உள்ள மீதம் உள்ள பாதி பகுதியை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் முழு சொத்தையும் திம்முரெட்டியார் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள். திம்முரெட்டியாருக்கு வாதியின் சகோதரி சுப்புதாய் எழுதிக்கொடுத்த சொத்தை பொறுத்து வாதி சண்முவடிவம்மாளின் மூத்த மகன் விஸ்வநாதகங்காததிலகர் மற்றும் அவரது சகோதரர் வராகமிசிரன் என்பவரும் இதே நீதிமன்றத்தில் அந்த சொத்து பூர்வீக சொத்து என்பதால் அந்த பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் வழக்குதாக்கல் செய்ததாக சொன்னார்கள். ஆனால் வீட்டுபத்திரம் எனது அண்ணன் திம்முரெட்டியார் பெயரில் உள்ளது. சண்முகவடிம்மாளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை பொறுத்து பிறப்பித்து கொடுத்ததாக சொல்லப்படும்மேற்சொன்ன இரண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரங்களும் செல்லத்தக்கதல்ல அந்த தான்செட்டில் மெண்ட்பத்திரம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. சுப்புதாயின் தாயரான வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட 16 ஏக்கர் நிலத்தை திம்முரெட்டியார் வடிவுக்கு விட்டுக்கொடுத்து வள்ளியம்மாளிடம் இருந்து இடத்தை எழுதிவாங்கி திம்முரெட்டியார் வீடு கட்டியுள்ளார். அதை என் அண்ணன் சொன்னார். மேற்படி விதமாக என் அண்ணன் சொன்னதாக நான் பொய்யாக இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திம்முரெட்டியார் இறந்த பின்னிட்டு அவரது மனைவி சுப்புதாய் இறந்த பின்னிட்டு சுப்புலட்சுமி நகை மற்றும் பொருள்களை எடுத்ததாக போலிசார் விசாரித்தார்கள் என்றால் வடிவின் அக்கா மகன்கள்தான் 3 நாட்கள் இருந்தார்கள். நான் போகவில்லை. கொரோனாவில் இறந்ததால் நான் வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். திம்முரெட்டியாரின் வாரிசாக என்னை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்பதற்காக நான் நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால்

நான் தனியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் அண்ணனுடன் சேர்ந்து நடநடிவக்கை எடுத்துள்ளேன். நானோ எனது சகோதரர்களோ திம்முரெட்டியாரின் வாரிசுகள் கிடையாது என்றால் சரியல்ல. இறந்துபோன சுப்புதாயின் வாரிசு வாதி தான் என்றால் எனது அண்ணனுடன் பிறந்ததால் நாங்களும் வாரிசு ஆவோம். நாங்கள் இறந்து போன சுப்புதாயிக்கு வாரிசாக மாட்டோம் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு தான் நாங்கள் வாரிசுகள் ஆவோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள இந்து வாரிசு உரிமை சட்டம் பிரிவு 15(1) ன் படி திம்முரெட்டியாருக்கும், சுப்புதாய்க்கும் நாங்கள் வாரிசாக மாட்டோம் என்றால் சரியல்ல. இறந்துபோன சுப்புதாய்க்கு வாதி மட்டுமே வாரிசு என்றால் சரிதான். ஆனால் எங்கள் அண்ணனுக்கு நாங்கள் வாரிசு ஆவோம்.